**பேராதனைப் பல்கலைக்கழகம்**

தொலை தொடர் கல்வி நிலையம்

முதலாம் வருடம் (100 மட்டம்) கலைமாணி பரீட்சை

(வெளிவாரி- புதிய பாடத்திட்டம்)- ஏப்ரல் 2017

**மானிடப் புவியியல்- GGY-101**

இந்த வினாத் தாளில் 08 வினாக்கள் உள்ளன. உலக புருவுருவப்படம் வழங்கப்படும்

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

காலவரையறை- மூன்று (03) மணித்தியாலயங்கள்

..............................................................................................................

1. i மானிடப் புவியியல் என்றால் என்ன? பின்வருவனவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

   அ. மானிடப் புவியியலின் நோக்கமும், உள்ளடக்கமும்
   ஆ. மானிடப் புவியியலில் பிரதானமாக முன்வைக்கப்படும் வினாக்களும், எண்ணக்கருக்களும்

   இ. மானிடப் புவியியலுக்கான அணுகுமுறை

   ii. ஏன் மானிடப்புவியிலாளர்கள் வரைபடங்களை பயன்படுத்துகின்றனர் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

2. பின்வரும் வரலாற்று சம்பவங்களை கருத்திற் கொண்டு, வளங்களின் பயன்பாடு, மனிதனுக்கும் சூழலிற்கும் இடையிலான உறவுகள் மற்றும் மானிட நடவடிக்கையின் பரப்பு ரீதியான மாற்றங்களை விளக்குக. (25 புள்ளிகள்)

   அ. வேட்டையாடல், சேகரித்தல் என்பதிலிருந்து உணவு உற்பத்தியை மேற்கொள்வதற்கான மாற்றம்

   ஆ. ஆரம்ப கால நகரங்கள்

   இ. மானிய முறையின் கீழ் கிராம நிலங்களின் ஒன்றிணைப்பு

   ஈ. ஐரோப்பிய உலக முறைமையின் உருவாக்கம் (வியாபாரத்தின் ஊடாக முதலாளித்துவம்)

3. i. மக்கள் தொகை மாற்றத்தின் மாதிரியில் பிரதான படிமுறைகளை ஒரு வரைபடத்தில் அமைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

   ii. "பிரதேசத்திற்கு பிரதேசம் மக்கள் தொகை பிரச்சினையும் அதன் தன்மையும் வேறுபட்டதாக காணப்படும்" இம்மாற்றங்களை அவதானிக்கக் கூடிய இரண்டு நாடுகளை தெரிவு செய்து அந்நாடுகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது படிமுறை மாற்றங்களின் போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒப்பிட்டு வேறுப்படுத்திக் காட்டுக? (15 புள்ளிகள்)

4. i. நகராக்கம், நகர வளர்ச்சியினையினை வேறுப்படுத்திக் காட்டுக (10 புள்ளிகள்)

ii. ஏன் அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே நகராக்கத்தின் வளர்ச்சி அதிகமாக காணப்படுகின்றது. (15 புள்ளிகள்)

5. i. தரப்பட்டுள்ள உலகப்புருவுருவப்படத்தில் வேறுப்பட்ட இரண்டு அபிவிருத்தி பிரதேசங்களை குறித்து காட்டுக. (05 புள்ளிகள்)

ii.இந்த இரண்டு பிரதேசங்களின் அபிவிருத்தி அடைவுகளை ஒப்பிட்டு கருத்துறைக்க (20 புள்ளிகள்)

6. i. குடியேற்றவாதம் மற்றும் ஏகாதிபத்தியம் என்பவற்றை வரையறை செய்க(10 புள்ளிகள்)

ii. அதிகமான உலக நாடுகளில் இவ்வாறான குடியேற்ற வாதம் மற்றும் ஏகாதிபத்திய அதிகாரம் காரணமாக பொதுவான தாக்கத்தினை விளக்குக. (15 புள்ளிகள்)

7. i. உலகமயமாதல் என்பதனை விளக்குக (05 புள்ளிகள்)

ii. உலகில் பொருளாதாரம், அரசியல் மற்றும் சூழலியல் அம்சங்களில் உலகமயமாதலின் பரிமாணத்தை விளக்குக. (15 புள்ளிகள்)

8. கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் உள்ள சான்றுகளை உதாரணமாகக் கொண்டு, வளங்கள் அபிவிருத்தி மற்றும் சூழலியல் ஆகியவற்றுக்கு இடையிலான பரப்பியல் ரீதியான உறவுகளை விபரிக்குக. (25 புள்ளிகள்)

**அல்லது**

உலகினை மனிதவாழ்விற்கான உன்னதமான இடமாக மாற்றுவதற்கு எவ்வாறு மானிடப்புவியியல் பங்களிப்பினை மேற்கொள்ளலாம் (25 புள்ளிகள்)